# மதவாச்சி பிரதேச சபை

# அனுராதபுரம் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 14 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 08 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மதவாச்சி பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதவாச்சி பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ரூபா 293,760 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற கட்டிடங்களின் ரூபா 664,735 தொகையான நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேலைகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 201,132 தொகையான இறுதியிருப்பு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க்பபட்டிருக்கவில்லை.

(ஈ) வங்கிக்கு நேரடி அனுப்புதலாகக் கிடைத்த ரூபா 131,000 தொகை ஆண்டின் வருமானமாகவும், கிடைக்க வேண்டிய ரூபா 915,715 தொகையான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டிய வருமானமாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்குரியதாக 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 13,789 கூட்டுத்தொகையான செலவினங்கள் அட்டுறு செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்ற கடனுக்காக மீளாண்டிலும் முன்னைய ஆண்டுகளின் போதும் செலுத்தப்பட்ட கடன் தவணைப் பணம் பிழையான முறையில் கணக்கு வைக்கப்பட்டமையினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன் கணக்கின் மீதி ரூபா 1,099,611 தொகை அதிகரித்தும் வருமானத்தை கணக்கு வைக்கும் போது அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படை ஈடுபடுத்தப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் ரூபா 497,505 தொகை அதிகரித்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 43,399,146 கூட்டுத்தொகையான 17 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த/ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,550,743 ஆக இருந்ததுடன் பட்டோலைகள்/ அறிக்கையின் பிரகாரம் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 34,367,160 ஆக இருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,646,612 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,221,686 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 890 | 877 | 1,353 |
| (ii) | வாடகை | 3,622 | 2,780 | 2,433 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,198 | 1,231 | 506 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,695 | 2,722 | 6,053 |

#### 2.2.2 வாடகை

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(i) ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத நிலுவையாக இருந்த கடை வாடகையின் அளவு ரூபா 831,944 ஆக இருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய என்சீபீ/எல்ஜீ/4/7/19 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் கடை வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்படாமல் 20 வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட மதிப்பிட்டின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(இ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1989 செப்தெம்பர் 30 ஆந் திகதிய எல்ஜீ/3 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் vii ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஆகக் குறைந்த கேள்வியினை விடக் குறைவாக வியாபார உரித்தை வாடகைக்கு வழங்கியமையினால் ரூபா 449,900 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,049,879 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 915,715 |

### 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட பௌதீக வளங்கள்

ரூபா 1,702,408 கூட்டுப்பெறுமதியான வடமத்திய மாகாண பிரதம அமைச்சிலிருந்து 2008 ஆம் ஆண்டின் போது கிடைத்த அரிசி மாவுடன் அண்மித்த பேக்கரி உற்பத்தித் தொகுதி மற்றும் அதற்குரிய கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

### 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் வெற்றிடமான 08 பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் மற்றும் மிகையான ஊழியர்களுக்காக பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட ரூபா 150,353 தொகையான மீதி 2012 மே மாதம் தொடக்கம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 ஒப்பந்த நிருவாகம்

(அ) மாகாண பொறியியலாளரின் நிலைமைக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாமல் ரூபா 6,100,176 கிரயமான 10 வேலைகளுக்காகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 3,255,543 கிராயமான 07 நிர்மாண வேலைகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஓ) ஆம் பிரிவின் பிரகாரம் விழாவிற்காகச் செய்யப்பட்ட ரூபா 138,425 கூட்டுத்தொகையான செலவினத்திற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்